சென்னை மாகாண ஆரம்பாசிரியர் சங்கப் பிரசுரம்.

THE

# ASSOCIATION READER

## SECOND BOOK.

## சங்க வாசகம்

இரண்டாம் புத்தகம்.



MADRAS:

S' PUBLISHING HOUSE.

[As. 3.

ன்னை மாகாண ஆரம்பாசிரியர் சங்கப் பிரசுரம்.

# THE ASSOCIATION READER

## SECOND BOOK.

# சங்க வாசகம்

## இரண்டாம் புத்தகம்.



P31.J9
N25
67813

MADRAS:
THE TEACHERS' PUBLISHING HOUSE.

*Copy Right.*] [As. 3.

494.81186
1383

PRINTED AT THE

K. P. WORKS, G. T., MADRAS.

P31, J9
N25

# முன்னுரை

இச்சிறிய வாசகம் அநுபவம் மிகுந்த ஆசிரியர்கள் இயற்றியதாகும். குழந்தைகள் விருப்பத்துடன் எளிதில் கற்கும் வண்ணம் இந்நூலின் ஆரம்பத்திலிருந்தே பொருத்தமான இனிய விஷயங்கள் அடங்கிய சிறு பாடங்கள் அமைந்திருக்கின்றன. கூடுமானவரையில் கடின சந்திகள் விலக்கப்பட்டிருக்கின்றன.

கிராமங்களிலும் நகரங்களிலும் படித்துவரும் சிறு பிள்ளைகள் எளிதில் அறிந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களே இதனுள் அடங்கியிருக்கின்றன. அன்றியும் யுக்தி, பக்தி, நல்லொழுக்கம் முதலிய அரிய விஷயங்களை, இப்புத்தகம் கதை மூலமாகச் சிறு பிள்ளைகளுக்கு நன்கு விளக்கும். இன்னிசையுடன் மனப்பாடம் செய்யக்கூடிய எளிய செய்யுட் பாடங்களும் இதனுள் சேர்ந்துள்ளன.

கல்வி இலாகாவின் இக்காலத்திய குறிப்புக்களையும் நித்தியாநுபவத்தையும் தழுவி இவ்வாசகம் அமைந்துள்ளபடியால், இது எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் சால உதவி புரியக்கூடும்.

இவ்வாசகத்திலுள்ள பாடங்களைப் போதிக்க வேண்டிய முறையைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும் "வசன போதினி" என்னும் சிறிய புத்தகம் ஒன்று இதனோடு வெளியாயிருக்கின்றது. உபாத்தியாயர்களுக்கு அது மிக்க உதவியாக விருக்கும்.

# நூல் அடக்கம்.


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸரஸ்வதி | ... | 7 |
| 2. | பசு | ... | 8 |
| 3. | தேன் | ... | 9 |
| 4. | தெப்பக் குளம் | ... | 10 |
| 5. | புரு | ... | 11 |
| 6. | குயவன் | ... | 13 |
| 7. | மண்டபம் | ... | 14 |
| 8. | கரும்பு | ... | 16 |
| 9. | உழவு | ... | 17 |
| 10. | கோயில் | ... | 18 |
| 11. | கய் கறி வகைகள் | ... | 21 |
| 12. | படைவீரன் | ... | 23 |
| 13. | எறும்பு | ... | 24 |
| 14. | தாலாட்டு | ... | 26 |
| 15. | தெருக்கள் | ... | 27 |
| 16. | நற்புத்தி | ... | 29 |
| 17. | திசைகள் | ... | 29 |
| 18. | ஒரு யுக்தி | ... | 31 |
| 19. | காற்று | ... | 33 |
| 20. | பாபர் | ... | 34 |
| 21. | பற்கள் | ... | 36 |

| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 22. | விநாயக சதுர்த்தி | ... | 37 |
| 23. | நெருப்பு | ... | 40 |
| 24. | சுகவழி | ... | 41 |
| 25. | மகாபலி | ... | 42 |
| 26. | உபதேசம் | ... | 44 |
| 27. | கை எழுத்து | ... | 45 |
| 28. | கோபால கிருஷ்ண கோகலே | ... | 46 |
| 29. | இராமகவி | ... | 47 |
| 30. | உடை | ... | 49 |
| 91. | கால நிலை | ... | 51 |
| 32. | பாம்பாட்டி | ... | 52 |
| 33. | கஜேந்திரன் | ... | 53 |
| 34. | எள்ளு | ... | 56 |
| 35. | வருஷங்கள் | ... | 58 |
| 36. | திதி | ... | 59 |
| 37. | நக்ஷத்திரம் | ... | 61 |
| 38. | உலகநீதி | ... | 62 |



## ஸரஸ்வதி.

இவள் ஸரஸ்வதி. தாமரைப் பூவில் இவள் உட்கார்ந் திருக்கிறாள். இவளுக்கு நான்கு கைகள் உண்டு. ஒரு கையில் புத்தகம் வைத்திருக்கிறாள். மற்றொரு கையில் ஜபமாலை இருக்கிறது. இன்னும் இரண்டு கைகளால் வீணை வாசிக்கிறாள்.

ஸரஸ்வதியை வணங்கினால் நல்ல ஞானம் உண்டாகும். காலை மாலை இவளை நாம் துதிப்போமாக.



## 2. பசு.

படத்தைப் பார்! பசுவை ஒரு பெண் கறக்கிறாள். இவள் பசுவின் பின்னங்-கால்களை ஒரு கயிற்றால் கட்டி யிருக்கிறாள்; கன்றைப் பசுவின் முன்னங்-காலில் அணைத்திருக்கிறாள்.

பாலின் நிறம் வெண்மை. அது இனிப்பாக இருக்கும்; உடம்புக்குப் பலம் தரும். பால் தோய்ந்தால் தயிராகும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம். வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும். நெய் கலந்த சோறு இனிப்பாக இருக்கும். அது வாசனையாகவும் இருக்கும்.

பசுவானது புல், தவிடு, வைக்கோல் இவைகளைத் தின்னும்; கழுநீரைக் குடிக்கும். அது ஒரு சாதுவான மிருகம். பசுவை நாம் அன்புடன் வளர்க்கவேண்டும்.

---

## 3. தேன்.

தேன் ஒரு தித்திப்பான பண்டம். புஷ்பங்களில் தேன் இருக்கும். தேனீக்கள் பூவிலிருந்து தேனை எடுத்து வந்து கூட்டில் சேர்க்கும்.



படத்தில் தெரிவது ஒரு தேன் கூடு. இந்தக் கூட்டைத் தேனீக்கள் கட்டுகின்றன. கூட்டின் அருகில் நாம் சென்றால் ஈக்கள் கொடுக்கினால் கொட்டித் துரத்தும்.

தேன் நமக்கு எப்படிக் கிடைக்கிறது? வேடர் தேன் அடைக்கு அருகில் தீ இட்டு எரித்து

ஈக்களை ஓட்டுவார்கள். பின்பு அவர்கள் கூண்டைப் பிழிந்து தேனை எடுப்பார்கள்.

மருந்துக்குத் தேன் உபயோகப்படும். நல்ல தேன் வெகு நாள் கெடாமல் இருக்கும்.

---



## 4. தெப்பக் குளம்.

இது ஓர் அழகான குளம். குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் தெரிகிறது. குளத்தின் நான்கு பக்கங்களிலும் படிக்கட்டு வரிசை வரிசையாக இருக்கின்றன.

படியில் இறங்கும்போது மெள்ள இறங்க வேண்டும். ஜலத்துக்குள் உள்ள படிகளில் பாசி படிந்திருக்கும். அவ்விடத்தில் நாம் காலை

வைத்தால் வழுக்கும். ஆதலால் அந்தப் படிகளில் காலை நாம் நன்றாய் ஊன்றி வைக்கவேண்டும்.

சிலர் குளத்து நீரில் எச்சில் துப்புகிறார்கள்; கால் கழுவுகிறார்கள்; துணி கசக்குகிறார்கள். இவ்வாறு செய்வதால் குளத்து நீர் கெட்டுவிடும். கெட்ட நீரைக் குடித்தால் நோய் உண்டாகும்.

இந்தக் குளத்தில் வருஷத்திற்கு ஒரு முறை தெப்ப உற்சவம் நடக்கும். தெப்பம் நீரில் மிதந்து செல்லும். தெப்பம் பார்க்க ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள்.

---



## 5. புறா.

புறா ஓர் அழகான பறவை. பறக்கும் பிராணிகளுக்குப் பறவை என்று பெயர்.

புறுவின் கால்கள் பவளம்போல் சிவப்பாக இருக்கும். பூச்சி, புழு, தானிய மணிகள் முத லியவற்றைப் புறு பொறுக்கித் தின்னும். அது தலையை அசைத்து அசைத்து நடப்பது விநோ தமாக இருக்கும்.

புறுக்கள் வானத்தில் பறந்து செல்லும்; பறந்துகொண்டே ஆகாயத்தில் கரணம் போடும். எவ்வளவு தூரம் சென்றாலும் அது தவறா மல் தன் இருப்பிடத்திற்கு வந்து சேரும்.

ஆண் புறுக்களின் கழுத்துப் பளபளப்பாக இருக்கும். அதில் பல வர்ணங்கள் காணலாம். சிலர் புறுக்களை ஆசையுடன் வளர்க்கிறார்கள். புறுக் கூண்டில் பற்பல அறைகள் உண்டு. பறவைகளைக் கூண்டில் அடைத்து வளர்ப்பது பாவம்.

புறுக்கள் ஜதை ஜதையாக வாழும். ஒன்றை விட்டு மற்றொன்று பிரிவது இல்லை; பிரிய நேரிட்டால் மிகவும் வருந்தும். அந்த விசனத் தால் அது இறந்து விடுவதும் உண்டு.

“ கூடிப்பிரியேல் ”

---



# 6. குயவன்.

சாதாரணமாக எல்லா வீடுகளிலும் சட்டிகளையும் பானைகளையும் காணலாம். இவை களிமண்ணால் செய்தவை. ஆகையால் இவைகளை மண்பாண்டங்கள் என்று நாம் சொல்கிறோம்.

ஈரமான களிமண் நயப்பாக இருக்கும். அதைப் பந்துபோல் உருட்டலாம்; தட்டுபோல் தட்டலாம். நாம் விரும்பும் உருவங்கள் எல்லாம் களிமண்ணால் செய்யலாம்.

மண் பாண்டங்களைக் குயவன் செய்வான். அவனிடம் சக்கரம் ஒன்று உண்டு. அவன்

சக்கரத்தின் நடுவில் களிமண்ணை வைத்து ஒரு கோலால் சக்கரத்தைச் சுற்றுவான். சக்கரம் சுழன்று கொண்டிருக்கும். குயவன் அப்போது அந்த மண்ணால் பல பாத்திரங்களைச் செய்வான். பின்பு அவைகளை எடுத்து உலர்த்தி அடுக்கிச் சூளையில் வைத்துச் சுடுவான்.

மண்பாண்டங்கள் எளிதில் உடையக் கூடியவை. ஆதலால் அவைகளைக் கையாளும்போது நாம் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மண்பாண்டங்களில் சமைத்த உணவு தேகத்துக்குச் சுகம் தரும்.

---

## 7. மண்டபம்.

இது ஒரு கல்மண்டபம். கோவில்களில் இம் மாதிரியான மண்டபங்களைக் காணலாம். கோயிலில் மண்டபங்களைக் கற்களாலேயே கட்டுவது வழக்கம்.

மண்டபத்திற்கு வேண்டிய கற்கள் பெரிய மலைகளில் அகப்படும். கல்தச்சன் மலைகளிலிருந்து கற்களை எடுத்து ஒழுங்கு படுத்துவான்.

கல்மண்டபத்திற்கு எத்தனை கால் இருக்கிறதோ அதற்குத் தக்கபடி அதன் பெயர் வழங்



கும். நாற்கால் மண்டபம், பதினறுகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் என்று பலவகையான மண்டபங்கள் உண்டு.

கல்மண்டபங்களின் தூண்களில் விசித்திரமான பதுமைகள் செதுக்கி இருக்கும். அவ்வேலை செய்கிறவர்களுக்குச் சிற்பிகள் என்று பெயர்.

கல் மண்டபம் வெகுகாலம் அழியாமல் இருக்கும்; அது தேயாது; உளுக்காது; உதிராது; கரையாது; சீர் குலையாது.

## 8. கரும்பு.

நமது தேசத்தில் கரும்பு எல்லா இடங்களி



லும் பயிராகிறது. இது சாதாரணமாக ஏழு, எட்டு அடி உயரம் வளரும். கருப்பங் கழியில் பல கணுக்கள் உண்டு. கரும்பின் இலை நீண்டுஇருக்கும். கரும்பின் வெளிப் புறம் உறுதியானது. உட்புறம் சடைபோல் மென்மையாகவும், வெண்மையாகவும், இரசம் நிறைந்தும் இருக்கும்.

கரும்பின் வெளிப்புறத்தில் சிவப்பு, வெளுப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள்கொண்ட கோடுகள் இருக்கும். கருப்பஞ்சாறு தித்திப்பானது. மேல் தோலைச் சீவி எறிந்து விட்டுக் கரும்பைத் தின்பது வழக்கம்; இரசத்தை உறிந்து சக்கையைத் துப்பி விடுவார்கள்.

கருப்பங்கழியின் அடிப்பாகம் மிகவும் உருசியானது; மேலே போகப் போகச் சுவை

குறையும். நுனிப்பாகம் கொஞ்சம் உவர்ப்பாக இருக்கும்.

கரும்பை ஆலையில் இட்டு ஆட்டிச் சாறு எடுக்கலாம். சாற்றைக் காய்ச்சி வெல்லமும் சர்க்கரையும் செய்யலாம்.

---



## 9. உழவு.

படத்தில் ஒரு குடியானவன் ஏர் உழுகிறான். கலப்பையை இரண்டு எருதுகள் இழுக்கின்றன. உழவன் மேழியைத் தன் இடதுகையால் அழுத்திப் பிடிக்கிறான். ஏர் உழும்போது கலப்பை நிலத்தைப் பிளந்துகொண்டு செல்லும். உழுவதால் மண் பெயர்ந்து மிருதுவாகிறது.

அகல உழுவதினும் ஆழ உழுவது மேல். பூமியை ஆழமாக உழுதால் பயிர் நன்றாய்

வேர் ஊன்றிச் செழித்து வளரும். ஈரமான தரையை உழுவது எளிது.

உழுது பயிர் செய்தே உணவுக்கு வேண்டிய தானியங்களைப் பெற வேண்டும். உழவுத் தொழிலே எதற்கும் மேலானது. குடியானவர்கள் உழுது உண்டு வாழ்வார்கள். அவர்கள் உதவியை நாம் என்றும் மறத்தல் கூடாது.

'உழுதுண்டு வாழ்வதே ஏற்றம்.'

---

## 10. கோயில்.

இது ஒரு கோயில். இந்தக் கோயிலின் கோபுரம் அதிக உயரம். கோபுரத்தில் பல நிலைகள் தெரிகின்றன.

கோபுர வாசல் விசாலமானது. கோயிலின் உள்ளே போகும்போது பயத்தோடும் பக்தியோடும் போகவேண்டும்.

கோயிலில் பூஜை நடக்கும்போது மணி அடிப்பார்கள்; மேளம் கொட்டுவார்கள்; வாத்தியம் வாசிப்பார்கள்.



பெரிய கோயில்களில் வருஷந்தோறும் திரு விழா நடக்கும். அப்பொழுது வாகனத்தின்மீது சுவாமி வீதியில் வருவார். எல்லோரும் சுவாமி யைத் தொழுவார்கள்.



மஹம்மதியர் தொழும் ஆலயத்திற்கு மசூதி என்று பெயர். மசூதிகளின் மீது அழகான சிகரங்களும், பிறைச் சந்திரன் உருவமும் இருக்கும்.

கிறிஸ்தவர் துதிக்கும் ஆலயங்களின் உச்சியில் சிலுவையின் உருவம் தோன்றும். கிறிஸ்தவர்களுடைய ஆலயத்தை மாதாகோயில் என்று கூறுவதும் உண்டு.



“கோயில் இல்லா ஊரில் குடி இருக்கவேண்டாம்.”

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று.”



# 11. காய் கறி வகைகள்.

நாம் உண்ணும் காய் கறி பதார்த்தங்கள் தோட்டங்களில் பயிராகின்றன. காய்கள் மரங்களிலும், செடிகளிலும், கொடிகளிலும் காய்க்கும். கிழங்கு வகைகள் பூமிக்குள் உண்டாகும்.

வாழை, மா, பலா, முருங்கை முதலிய காய்கள் மரங்களில் உண்டாகின்றன. வாழைக்காய் சீப்புச் சீப்பாய்க் காய்க்கும். வாழைக் கச்சல் துவர்க்கும். மாங்காய் புளிக்கும். பலாக்காயின்மேல் முள் அடர்ந்து இருக்கும். முருங்கைக் காய் நீள

மானது. வாழை, மா, பலா இவைகளின் காய்கள் பழுத்தால் தின்பதற்கு உருசியாக இருக்கும்; நாம் இப்பழங்களை முப்பழம் என்று வழங்குகிறோம்.

கத்திரி, வெண்டை, கொத்தவரை முதலிய காய்கள் செடிகளில் காய்க்கின்றன. இந்தக் காய்களைப் பிஞ்சாய் இருக்கும்போதே சமைத்துச் சாப்பிடுகிறோம்.

பாகல், புடல், பூசுணி, அவரை, பீர்க்கு முதலியவை கொடிகளில் காய்க்கின்றன. பாகற்காய் கசக்கும். இதன் மேற்புறம் முள்ளு முள்ளாக இருக்கும். புடல் நீளமாகக் காய்க்கும். பூசுணிக்காய் உருண்டு பருத்து இருக்கும்.

வள்ளி, கரணை, உருளை முதலியன கிழங்கு வகைகள் ஆகும். வள்ளிக் கிழங்கு தித்திக்கும். கரணைக் கிழங்கு காரும்.

நன்றாய்ப் பாடுபட்டுப் பயிரிட்டால் தோட்டக்கால் பயிர்கள் நல்ல பலன் தரும். பசுமையான காய்கறிகளே உடம்பிற்கு நல்லவை.

# 12. படை வீரன்.

இவன் ஒரு போர் வீரன். இவனுடைய வலது கையில் ஒரு துப்பாக்கி இருக்கிறது. இடுப்பில் ஒரு பட்டாக் கத்தி தொங்கும்.



யுத்தம் செய்வதில் இவன் வெகு தீரன். இவன் மிகவும் பலவான்; துன்பம் என்ன வந்தாலும் பயந்து முதுகு காட்டி ஓட மாட்டான்; யஜமானன் கட்டளைப்படி நடப்பான்; தேசத்திற்காகத் தன் உயிரையும் கொடுப்பான்.

சேனையில் பல வீரர்கள் இருப்பார்கள். சேனைகளில் பலவகை உண்டு. அவை காலாள்

படை, குதிரைப் படை, பீரங்கிப் படை, கப்பற் படை, விமானப் படை முதலியன. இவ் வீரன், காலாள் படையைச் சேர்ந்தவன்.

---



## 13. எறும்பு.

எறும்பு ஒரு சிறிய பிராணி. அது தரையில் வளை செய்துகொண்டு வசிக்கும். எறும்புகள் கூட்டம் கூட்டமாக வாழும். அவை ஒன்றின் பின் ஒன்ருக ஊர்ந்து செல்லும்.

எறும்பின் தலை பெரியது; கால்கள் சிறியவை; உடல் மிகவும் இலேசானது. எறும்புகளில் பலவகை உண்டு. சில எறும்புகள் சிவப்பாக இருக்கும்; சில கறுப்பாய் இருக்கும். சிறு எறும்பை நாம் சிற்றெறும்பு என்போம்.

கட்டெறும்பு என்பது ஒருவகை. இறக்கை முளைத்த எறும்புகளும் சில உண்டு.

வெல்லத்தை ஒரு சட்டியிற் போட்டு மூடி, உறியின் மீது வைத்திருந்தாலும் எறும்பு அதனை மோப்பத்தால் தெரிந்து கொள்ளும்; எவ்விதத்திலாவது அங்குப் போய்ச் சேரும். எறும்புக்கு வாசனை பிடிக்கும் சக்தி அதிகம்.

எறும்பு சாரி சாரியாய் ஊர்ந்து போகும். அப்போது அதை மிதித்தால் அது வெடுக்கென்று கடிக்கும்.

மழைநாளில் எறும்பு அதிகமாய் வெளியில் வராது. அப்போது அது தீனிக்கு என்ன செய்யும்? வேண்டிய உணவைக் கோடை காலத்திலேயே சேகரித்து வளைகளில் வைத்துக்கொள்ளும். எறும்புக்குச் சோம்பல் என்பதே கிடையாது. எறும்பு மிகவும் சுருசுருப்புள்ளது.

'சோம்பித் திரியேல்'.



# 14. தாலாட்டு

(1) ஆராரோ ஆராரோ
என்னரசே ஆராரோ
சீராரும் எங்கள் குலத்
தீபமே ஆராரோ.

(2) அத்தை அடித்தாளோ
அக்காள் தான் அடித்தாளோ
முத்தான வாய்திறந்து
மொழிந்துறங்காய் கண்மணியே.

(3) அடித்தாரைச் சொல்லி அழு
ஆக்கினைகள் பண்ணிவைப்போம்
தொட்டாரைச் சொல்லி அழு
தண்டனைகள் பண்ணிவைப்போம்.

(4) வண்ண மணித் தொட்டிலிலே
வாய்ந்த செம்பொன் கட்டிலிலே
கண்ணே என் கண்மணியே
கற்பகமே கண்வளராய்.

(5) தங்கத்தால் யானைகளும்
தந்தத்தால் சேனைகளும்
அந்தமாக நான் கொடுப்பேன்
சுந்தரமே கண்வளராய்.

---

## 15. தெருக்கள்.

தெருக்களில் ஜனங்கள் நடமாடுகிறார்கள். சிறு பிள்ளைகள் வீதியில் விளையாடுவார்கள். வண்டிகள் அங்கு ஓடிக்கொண்டு இருக்கும். சில வேளைகளில் இந்த வண்டிகளால் ஜனங்களுக்கு ஆபத்து விளைவதும் உண்டு.

பெரிய பட்டணங்களில் தெருக்கள் சந்திக்கும் இடங்களில் டாணாக்காரன் நின்று கொண்டிருப்பான். எவர்க்கும் அபாயம் உண்டாகாமல் அவன் பார்த்துக் கொள்வான். ஜனங்கள் கூட்டம் கூடி வழியை அடைத்துக் கொண்டு நிற்கும்படி அவன் விடமாட்டான்.

வண்டிகள் ஓடுவதினால் தெருக்களில் பள்ளம் உண்டாகும். ஆதலால் தெருக்களை அடிக்கடி பழுது பார்க்க வேண்டும். நிழல் தரும்



மரங்களை வீதியின் இரண்டு பக்கங்களிலும் வைப்பது நலம்.

இருட்டிய பின் தெருவில் போக வெளிச்சம் வேண்டும் அல்லவா? அதற்காக ஒவ்வொரு தெருவிலும் விளக்குப் போடுகிறார்கள். தினமும் ஒருவன் மாலையில் வந்து தீபம் ஏற்றுவான். நாள்தோறும் சில வேலையாட்கள் வீதிகளைச் சுத்தம் செய்வார்கள்.

இந்த வேலைக்காரர்களுக்கு யார் சம்பளம் கொடுக்கிறார்கள்? நாம் வீட்டுவரி கட்டுகிறோம் அல்லவா? அதிலிருந்து இவர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது.

## 16. நற்புத்தி

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

---

## 17. திசைகள்

உமாபதி, சீதாபதி என்ற இரண்டு பிள்ளைகள் ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். ஒரு நாள் சீதாபதி பாடசாலைக்கு வரவில்லை. அன்று மாலையில் இருவரும் தெருவில் விளையாடப் போனார்கள்.

உமாபதி—"சீதாபதி! நீ ஏன் இன்று பாடசாலைக்கு வரவில்லை?"

சீதாபதி—"நண்பா! இன்று காலையில் எனக்குத் தலைவலி; ஆதலால் என்னால் வர முடியவில்லை. இன்றைக்கு என்ன பாடம் நடந்தது? அதை நீ எனக்குச் சொல்லிக் கொடுக்கிறாயா?"

உமாபதி—"சந்தோஷமாகச் சொல்லுகிறேன், கேள்; நீ இப்போது சூரியனை எங்கே பார்க்கிறாய்?"

சீதாபதி—(கையால் காட்டிக்கொண்டு) "அதோ அங்கே பார்க்கிறேன்."

உமாபதி—"அந்தப் பக்கத்துக்கு 'மேற்கு' என்று பெயர். அதிகாலையில் சூரியன் உதயமாகும் பக்கம் உனக்குத் தெரியுமா ?"

சீதாபதி—"தெரியும். இதோ இந்தப் பக்கத்தில் சூரியன் உதிக்கிறான்." (காட்டுகிறான்.)

உமாபதி—"அதுதான் கிழக்கு."

சீதாபதி—"சரி; தெரிந்துகொண்டேன். சூரியன் உதிக்கும் திக்கு கிழக்கு; அது மறையும் திசை மேற்கு. இன்று நடந்த பாடம் இவ்வளவுதானா ?"

உமாபதி—"இன்னும் இரண்டொரு விஷயங்கள் உண்டு; சொல்லுகிறேன்; நான் சொல்லுகிறபடியே செய்."

சீதாபதி—" அப்படியே செய்கிறேன்."

உமாபதி—"கிழக்கு முகமாக நின்றுகொண்டு உன் இரு கைகளையும் தோளின் பக்கமாக நீட்டு."

சீதாபதி—"சரி; அப்படியே இதோ நீட்டினேன்." (கைகளை நீட்டுகிறான்.)

உமாபதி—"இப்போது உன் வலதுகைப் பக்கம் தெற்கு. இடதுகைப் பக்கம் வடக்கு."

சீதாபதி—"நண்பா! நான்கு திக்குகளின் பெயரையும் தெரிந்துகொண்டேன்."

உமாபதி—"இருக்கட்டும்; இப்போது நீ தெரிந்து கொண்ட நான்கு திசைகளின் பெயரையும் சொல்."

சீதாபதி—"கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு."

உமாபதி—"இருட்டிவிட்டது. வீட்டுக்குச் செல்வோம், வா; மற்றப் பாடங்களைக் காலையில் சொல்கிறேன்."

இருவரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே வீட்டுக்குச் சென்றார்கள்.

---



## 18. ஒரு யுக்தி.

அக்பர் என்ற ஒரு சக்கரவர்த்தி டில்லிப் பட்டணத்தில் இருந்து ஆண்டு வந்தார். அவர்

ஒரு மஹம்மதியர்; மிக்க புத்திசாலி. இந்துக் களை அவர் அன்புடன் ஆதரித்து வந்தார்.

ஒரு நாள் அக்பர், தன் மந்திரிகளுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார். அப் பொழுது அவர், தரையில் நேராக ஒரு கோடு கிழித்து, "நண்பர்களே! இந்தக் கோட்டை அழிக்காமல் சிறிதாகச் செய்ய முடியுமா?" என்று கேட்டார். அங்கு இருந்தவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. எல்லோரும் மதிமயங்கி நின் ருர்கள்.

வீரபாலன் என்ற மந்திரி அரசர் அருகில் இருந்தான். அவன், "அரசே! இது என்ன கஷ்டம்? இதோ பாருங்கள்; ஒரு நொடியில் செய்து காட்டுகிறேன்," என்ருன். யாவரும் வெகு ஆச்சரியத்துடன் கண் கொட்டாமல் கவ னித்துக் கொண்டிருந்தனர்.

வீரபாலன், அந்தக் கோட்டின் பக்கத்தில் அதை விட நீளமாக வேறு ஒரு கோடு கிழித்து, "அரசே! இப்போது பாருங்கள்; நீங்கள் கிழித்த கோடு சிறிதாய்விட்டது," என்று சொன் ஞன். அரசனும் மந்திரிகளும் அவனுடைய யுக்தியைப் புகழ்ந்து கொண்டாடினுர்கள்.

---

# 19. காற்று.

காற்று எங்கும் பாவி இருக்கிறது. அது இல்லாத இடம் இல்லை. ஆனால் அது கண்ணுக்குப் புலப்படாது. அது நம்முடைய உடலின் மீது வீசும்போது நாம் அதை அறிகிறோம். மரம் செடிகள் அசைவது காற்றாலேதான்.

காற்று மெதுவாக அடித்தால் அதை இளங்காற்று என்கிறோம். கடுமையாக வீசினால் அதைப் பெருங்காற்று என்று சொல்லுகிறோம். பெருங்காற்று அடிக்கும்போது மரங்கள் ஆடி அசையும்; புயல் காற்று அடித்தால் சில வேளைகளில் மரங்கள் வேருடன் பெயர்ந்தும் விழும்.

காற்று எந்தப் பக்கத்திலிருந்து வருகிறதோ அந்தத் திசையின் பெயரால் அதைக் குறிப்பிடுகிறோம். வடக்கில் இருந்து அடிக்கும் காற்றுக்கு வாடை என்று பெயர். தெற்கில் இருந்து அடிப்பது தென்றல். கிழக்கில் இருந்து வீசுவது கீழ்காற்று அல்லது கொண்டல். மேற்கில் இருந்து வீசுவது மேல்காற்று அல்லது கோடை.

இவற்றுள் தென்றல் காற்று, தேகத்திற்கு இன்பம் தரும்; பயிர் பச்சைகளைச் செழிக்கச் செய்யும். இது சித்திரை, வைகாசி மாதங்களில் வீசும்.



# 20. பாபர்.

முன்னொரு காலத்தில் டில்லி என்ற பட்டணத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் பெயர் பாபர். அவனுக்கு ஹுமாயூன் என்ற ஒரே மகன் இருந்தான். பாபருக்குத் தன் குமாரனிடத்தில் அதிகப் பிரியம்.

ஒரு சமயம் ஹுமாயூனுக்கு நோய் கண்டது. அதனால் ஹுமாயூன் மிகவும் வருந்தி, படுத்த படுக்கையாக இருந்தான். என்ன வைத்தியம் செய்தும் அவனுக்கு நோய் தீரவில்லை.

நாளுக்கு நாள் வியாதி அவனுக்கு அதிகமாயிற்று. அதனால் உடம்பு மெலிந்தது; நினைவு

தப்பியது. தன் அருமை மகன் இறந்து விடு வானோ என்று பாபர் கலங்கிக் கண்ணீர் விட்டு அழுதான்.

அப்பொழுது தற்செயலாய் அங்கே பாபரின் குலகுரு வந்தார். பாபர் அவருடைய பாதத் தில் விழுந்து அழுது, தன் கஷ்டத்தைச் சொல் லிக் கொண்டான். அதற்கு அவர், "அரசே! உன்னிடம் உள்ள ஓர் உயர்ந்த பொருளைக் கடவுளுக்குக் கொடு; இங்ஙனம் செய்தால் உன் மகன் நோய் நீங்கிப் பிழைப்பான்," என்றார்.

உடனே பாபர் கைகளைக் கூப்பிக்கொண்டு "ஈசா! உயிருக்கு உயிரையே தருகிறேன். என் உயிரைவிட உயர்ந்த பொருள் என்னிடம் வேறு உண்டோ? என் உயிரை நீர் எடுத்துக் கொள் ளும்; என் மகனை மாத்திரம் காப்பீராக," என்று வேண்டிக் கொண்டான்.

சில நாளில் பாபர் நோய் கண்டு உயிர் துறந்தான். ஹுமாயூன் வியாதி நீங்கிப் பிழைத்து வெகு காலம் அரசாண்டான்.

## 21. பற்கள்.

நமது வாயில் பற்கள் இருக்கின்றன. அவை முகத்திற்கு அழகு தருகின்றன. பல் விழுந்தவர் முகம் விகாரமாய் இருக்கும்.

உணவை மென்று தின்பதற்குப் பற்கள் உதவுகின்றன. அவை ஈறுகளில் பதிந்து இருக்கின்றன.

நாம் ஆகாரத்தை மெல்லும்போது சிறு துணுக்குகள் பற்களின் இடையில் புகுந்து கொள்ளும்; பற் குழியிலும் ஒட்டிக் கொள்ளும். அவை அங்கேயே தங்கினால் அழுகி நாற்றம் எடுக்கும். ஆகையால் சாப்பிட்டவுடன் நாம் வாயில் நீரை விட்டுக் கொப்புளித்து அலம்புகிறோம்.

பல்லில் ஊத்தை இல்லாதபடி தினந் தோறும் சுத்தி செய்யவேண்டும். சுத்தம் செய்யாவிட்டால், பலவிதமான வியாதிகள் உண்டாகும்; வாய் நாறும்; அஜீரணமும் உண்டாகும்.

மிருதுவான வஸ்துக்களால் தந்த சுத்தி செய்ய வேண்டும். செங்கல், மணல் முதலிய கடினமான பொருள்களால் பல்லைத் துலக்குதல் கூடாது. அவ்வாறு செய்தால் பற்கள் தேய்ந்து கெட்டுவிடும்.

குழந்தைகளின் பற்களுக்குப் "பால் பற்கள்" என்று பெயர். ஏழு எட்டு வயதானதும் அவை ஒவ்வொன்றாக விழுந்துவிடும். அந்த இடத்தில் புதிய பற்கள் முளைக்கும். ஒவ்வொருவர்க்கும் சாதாரணமாக முப்பத்திரண்டு பற்கள் உண்டு.

---



## 22. விநாயக சதுர்த்தி.

இராமன்—"கிட்டு! ஏது காலையில் எழுந்துவிட்டாய்?"

கிட்டு—"இன்று விநாயக சதுர்த்தி அல்லவா?"

இராமன்—"ஆம்! அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

கிட்டு—"காலையிலேயே எழுந்து புற்றுமண், புஷ்பம், பத்திரம், நாவல்பழம், விளாம்பழம் முதலியவைகள் கொண்டு வரவேண்டும்."

இராமன்—"புற்று மண் எதற்கு ?"

கிட்டு—"பிள்ளையார் செய்வதற்கு."

இராமன்—"ஆம்! ஆம்! இப்போது நினைவுக்கு வருகிறது. போன வருஷத்தில் என் தகப்பனார் செய்யும்போது பார்த்திருக்கிறேன்."

கிட்டு—"உன் கையில் வைத்திருப்பது என்ன?"

இராமன்—"இது பூக்குடலை; இதில் புஷ்பங்களை எடுத்து வரப்போகிறேன். இது துறட்டுக் கோல். துறட்டினால் உயரத்தில் உள்ள மலர்களை எளிதில் பறிக்கலாம்."

கிட்டு—"என்னையும் அழைத்துக் கொண்டு போகிறாயா ?"

இராமன்—"சந்தோஷமாக அழைத்துச் செல்கிறேன். வா, போவோம்."

கிட்டு—"இராமா! எனக்கு மரம் ஏறத் தெரியாதே. நான் நாவல் பழம் எப்படி பறிப்பேன் ?"

இராமன்—"அதற்கு நீ யோசிக்க வேண்டாம். நான் பறித்துத் தருகிறேன்."

பின்பு இருவரும் சேர்ந்து வெளியே சென்றார்கள். போகும்போது இருவரும் பாடிக் கொண்டே போனார்கள்.



பாட்டு.

கணபதியே மத கஜமுகனே
குணமதியைத் தரும் சிவசுதனே! (1)

மலர்கொண் டுன்தாள் பூஜிப்போம்
மலைமகள் மைந்தா! மகிழ்ந்தருளாய். (2)

கரியுருக் கொண்ட கண்ணியனே
பரிவுடன் எமையாள் புண்ணியனே. (3)

தேங்காய் மோதகம் எள்ளுருண்டை
பாங்காய்ப் பலவும் படைத்திடுவோம். (4)

பாடிப் பரவிப் பணிகின்றோம்
நாடிய வரங்களை நயந்தருளே. (5)

## 23. நெருப்பு.

நெருப்பு நமக்குப் பல வகையிலும் உபயோகப்படுகிறது. நெருப்பு இல்லாவிட்டால் சோறு சமைக்க முடியாது; விளக்கு எரியாது. கருமானுக்கு நெருப்பு அவசியம் வேண்டும். அவன் இரும்பை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அடித்துப் பல சாமான்கள் செய்வான். தட்டார வேலைக்கும் நெருப்புத் தேவை. பொன், வெள்ளி முதலியவற்றை நெருப்பில் இட்டு உருக்கியே நகைகள் செய்யவேண்டும்.

புகை வண்டியும், புகைக் கப்பலும் நீராவியின் உதவியினால் ஓடுகின்றன. நெருப்பில்லாமல் நீரை எப்படி ஆவியாக மாற்ற முடியும்?

நெருப்பு உண்டாக்குவதற்கு இக்காலத்தில் தீக்குச்சுக்கள் ஏற்பட்டு இருக்கின்றன. தீக்குச்சுக்களைத் தேய்த்து நாம் நெருப்பை உண்டாக்கிக் கொள்ளுகிறோம்.

சில வேளைகளில் நெருப்பினால் பல அபாயங்கள் நேரிடலாம். ஆதலால் நெருப்பின் சமீபத்தில் போகும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

# 24. சுகவழி

1. காலையில் எழுந்து கடவுளைத் துதி செய்.
2. கை கால் முகங்கள் கழுவிக் கொள்ளு.
3. பால்போல வெளுக்கப் பல்லைத் துலக்கு.
4. குளிர்ந்த நீரில் குளிக்கப் பழகு.
5. கந்தையே ஆயினும் கசக்கிக் கட்டு.
6. கூழே ஆயினும் குளித்துக் குடி.
7. சுத்தமே என்றும் சுகத்தை வளர்க்கும்.
8. அழுக்கே நோய்க்கு அருமைத் தாயாம்.
9. பசித்துப் புசிப்பதே பரமசுகம் தரும்.
10. மித போஜனமே இதத்தைச் செய்யும்.
11. நன்றாய் மென்று நலம்பெற விழுங்கு.
12. நினைத்தபோதுண்டு நிலை தடுமாறேல்.
13. சுருசுருப்பெவர்க்கும் சுகந்தரும் மருந்து.
14. சோம்பலென்பவர் தேம்பித் திரிவர்.
15. வியர்க்க விளையாடி மயக்கம் அகற்று.
16. மாலை உலாவல் மனத்துக் கினிமை.
17. இருட்டுமுன் வீட்டில இருக்கப்பாரு.
18. உண்டி அருந்தி உடன் இளைப்பாறு.
19. படுக்கும்போதும் பரமனைப் போற்று.
20. சேமம் புகினும் ஜாமத்துறங்கு.

---



# 25. மகாபலி

வெகு காலத்திற்கு முன்பு பலி என்று ஒரு சக்கரவர்த்தி இருந்தான். அவன் மிக்க பலசாலி. எல்லா அரசர்களையும் அவன் வென்று அடக்கி ஆண்டு வந்தான். ஆதலால் அவனுக்கு மகா பலி என்று பெயர் வந்தது.

ஆனால் அவன் அதிக கர்வம் கொண்டிருந் தான். அவனது கர்வத்தை அடக்கத் திருமால்

எண்ணங்கொண்டார். அவர் ஒரு சிறு பிள்ளை வடிவத்துடன் அவனிடம் சென்றார்.

மகாபலி அந்தச் சிறிய பிள்ளையைப் பார்த்து, "நீர் யார்? உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அந்தச் சிறுவன், "வேந்தே! நான் ஓர் ஏழைப் பிராமணன்; நான் இருந்து தவம் செய்ய என் காலடியால் மூன்று அடி நிலம் வேண்டும்," என்று யாசித்தான்.

அது கேட்டு மகாபலி, "ஆ! இது கேட்கவோ என்னிடம் வந்தீர்! நல்லது! அப்படியே தந்தேன்; உமது காலால் நீரே இடத்தை அளந்து கொள்ளும்," என்று சொன்னான்.

சிறுவனாய் வந்த திருமால் உடனே ஒரு பெரிய உருவம் கொண்டார்; பூமி முழுவதையும் ஓர் அடியாக அளந்தார்; வானத்தை இரண்டாம் அடியாக அளந்தார்; பின்பு அவர், "மூன்றும் அடிக்கு இடம் எங்கே?" என்று மகாபலியைக் கேட்டார்.

மகாபலி ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றான்; சற்று யோசித்துக் கடவுளே அவர் என்று நிச்சயித்தான்; பின்பு தன் கைகளைக் கூப்பிக்கொண்டு, "உமது மூன்றாவது அடிக்கு இடம் என் தலையே," என்றான். அவர் தமது

பாதத்தை அவனுடைய முடிமீது வைத்து, அவனைக் கீழுலகத்தில் அழுத்தி, அவன் கர்வத்தையும் அடக்கினார்.

---

## 26. உபதேசம்.

"பஞ்சைப் பனுதையை அடிக்காதே—அந்த
பாவந்தொலைய முடியாதே
தஞ்சமென்றோரைக் கெடுக்காதே--யார்க்கும்
வஞ்சனைசெய்ய நினையாதே." (1)

"ஏழைபாழைகள் இல்லையென்றாலவர்க்கு
இருந்தால் அன்னம் கொடுக்கவேண்டும்
நாளையென்று சொல்லல் ஆகாதே—யென்று
நான்மறைவேத முழங்கிடுமே." (2)

---

"வைதோரைக்கூட வையாதே—இந்த
வையகம் பொய்த்தாலும் பொய்யாதே
வெய்யவினைகள் செய்யாதே—கல்லை
வீணிற்பறவைகள் மேல் எய்யாதே." (3)

"நல்ல வழிதனை நாடு—எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு—அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு"
(4)

---

# 27. கை எழுத்து.

ஒவ்வொருவரும் அழகாக எழுதப் பழக வேண்டும். சிறு பிராயத்திலேயே பழகினால் எழுத்து நன்றாகப் படியும். எழுதிய எழுத்து பிறர் எளிதில் படிக்கும்படி இருக்கவேண்டும்.

எழுதுகோலை நேராகவும் ஒழுங்காகவும் பிடித்து எழுதினால் எழுத்துக்கள் கெடாமலிருக்கும். எழுதுகோலை அழுத்தி எழுதுவதும், மையை அடிக்கடி கீழே சிந்துவதும் கூடாது.

கை எழுத்து நன்றாக இராமையால் சில பிள்ளைகள் பரீக்ஷையில் தவறி விடுகிறார்கள். முத்துக் கோத்தது போல் எழுத்துக்கள் ஒழுங்காயும் அழகாயும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் படிப்பவர்க்குச் சந்தோஷம் உண்டாகும்.

இடது கைப் பக்கத்து ஓரத்தில் போதுமான இடம் விட்டு எழுதப் பழகுதல் நல்லது. எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேராமல் நன்றாகத் தெரியும்படி தனித்தனியாய் எழுதவேண்டும். வரிகள் கோணாமல் நேராக எழுதினால் நேர்த்தியாக இருக்கும்.

எழுதும்போது உடம்பைக் கோணலாக வைத்துக் கொள்ளக் கூடாது. முழங்கையை ஊன்றிக் கொள்ளுதல், நாக்கை நீட்டல், தலையைச் சாய்த்தல் முதலியவை கெட்ட வழக்கம் ஆகும்.

---

## 28. கோபால கிருஷ்ண கோகலே.

கோபால கிருஷ்ண கோகலே என்பவர் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சிறு பிராயத்தில்



அவர் பள்ளிக்குச் சென்று படித்துப் பல பரிசுகளைப் பெற்றார். பலர் அவருக்குப் பொருளுதவி செய்து அவரை ஆதரித்தார்கள். அவர் கருத்துடன் கல்வி கற்றுப் பண்டிதர் ஆனார்.

திரவியம் தேடித் தனவான் ஆகவேண்டும் என்று கோகலே விரும்பவில்லை. தான் கற்ற

கல்வியை ஏழைகளுக்குத் தானம் செய்ய வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். சொற்பச் சம்பளத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக அவர் அமர்ந்தார்.

பள்ளியில் படிக்கும் பிள்ளைகளிடம் அவர் காட்டிய அன்புக்கு அளவே இல்லை. மாணாக்கர்களும் அவரிடம் அதிக விசுவாஸம் வைத்திருந்தார்கள். மாணாக்கனைப் போலவே ஆயுள் முழுவதும் கோகலே, மேலும் மேலும் படித்து வந்தார்.

கோகலே, வெகு கடினமான விஷயங்களையும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல வல்லவர். அவர் நமது குறைகளை எல்லாம் இராஜாங்கத்தாருக்கு எடுத்துச் சொன்னார். ஏழைகளுக்கு வித்தியா தானம் செய்வது சர்க்காரின் முக்கிய கடமை என்று அவர் மன்றாடினார்.

நமது நன்மையை நாடியே அவர் உயிர் உள்ள வரைக்கும் உழைத்து வந்தார். அவரை நாம் மறத்தல் கூடாது.

## 29. இராம கவி.

உடையார் பாளையம் என்னும் ஊரில் பிரபு ஒருவர் இருந்தார். அவர் ஒரு பெரிய தனிகர்; அன்றியும் கல்வியில் தேர்ந்தவர்; தம்மைக் காண

வரும் பண்டிதர்களுக்கு அவர் பரிசு அளிப்பது வழக்கம். அவரை மரியாதையாக எல்லோரும் உடையார் என்றே அழைப்பார்கள்.

ஒரு நாள் இராம கவி என்னும் வித்துவான் அப் பிரபுவைப் பார்க்கச் சென்றார். சுவாமியையும், இராஜாக்களையும், பெரியோர்களையும், குழந்தைகளையும் பார்க்கப் போகும்போது வெறும் கையுடன் போதல் முறை அல்ல. ஆதலால் இராம கவி ஒரு தேங்காயை எடுத்துக்கொண்டு போனார்; உடையாரைக் கண்டார்; அவரைப் புகழ்ந்து ஓர் அழகிய பாட்டுப் பாடினார் ; பின்பு பிரபுவை வாழ்த்தி அவர் கையில் தேங்காயைக் கொடுத்தார்.

அப்போது பிரபுவின் பக்கத்தில் குழந்தைகள் இருந்தன. குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் என்று உடையார் அந்தத் தேங்காயை உடைத்தார். அது அழுகிக் கெட்டிருந்ததால் துர்நாற்றம் வீசிற்று. அதுகண்டு இராம கவி மிகவும் மனம் வருந்தினார்.

பிரபு சிரிப்புடன் இராம கவியை நோக்கி, "பண்டிதரே! இந்த அழுகின காயை ஏன் கொணர்ந்தீர்?" என்று கேட்டார். உடனே இராம கவி, "மகாப்பிரபு! என் மீது குற்றம் இல்லை; உடையார் என்னும் உமது பெயரைக் கேட்டு இதைக் கொணர்ந்தேன். உடைப்பார் என்ற பெயர்

உமக்கு வழங்கினால் நான் இக்காயைக் கொண்டு வந்திருக்க மாட்டேன்,'' என்றார்.

அது கேட்ட உடையார் பண்டிதரின் திறமையைக் கொண்டாடினார்; தாம் அணிந்திருந்த முத்து மாலையை இராம கவிக்கு வெகுமதியாக அளித்தார்.

---



## 30. உடை.

நாம் சாதாரணமாய் உடுக்கும் உடை பருத்தியால் ஆனது. பருத்தி ஒரு வகைச் செடியில் காய்க்கும். பருத்திச்செடி நமது நாட்டில் மிகுதியாகப் பயிராகிறது.

பருத்திக் காய் முற்றியதும் அது வெடிக்கும். காயினுள்ளே வெண்மையான பஞ்சு இருக்கும். பருத்தியைப் பன்னி நூலாக நூற்பது வழக்கம்.

நூல் நூற்கும் சக்கரத்தின் படத்தைப் பார்.



ஒரு பெண் ஒரு கையில் பருத்தியைப் பிடித்துக் கொண்டு நூற்கிறாள்; மற்றொரு கையால் சக்கரத்தைச் சுற்றுகிறாள். நன்றாகப் பழகினவர்கள் நூற்கும் நூல் நாணயமானதாக இருக்கும். நூல் நூற்கும் யந்திரச் சாலைகளும் உண்டு. அவைகளுக்குப் பஞ்சாலை என்று பெயர்.

சேணியன், நூலைத் தறியில் இட்டுத் துணி நெய்வான். நூலுக்குச் சாயம் தோய்த்து வர்ணம் ஊட்டலாம். நெய்த துணியைச் சாயத்தில் தோய்ப்பதும் உண்டு. நெசவுத் தொழில் மிகவும் சிறந்தது ஆகும்.

ஆடையை அடிக்கடி அழுக்குப் போக வெளுக்க வேண்டும். அழுக்கு உடையை உடுத்தால் நோய் வரும். அழுக்குத் துணியை வண்ணான் வெளுத்துக் கொடுப்பான்.

பட்டினாலும் ஆடை நெய்வது உண்டு. பட்டாடை விலை அதிகம். ஆடுகளின் ரோமத்தால் ஆகிய ஆடைக்குக் கம்பளி என்று பெயர். குளிர் நாட்களில் கம்பளி ஆடையை அணிவது வழக்கம்.

---

## 31. கால நிலை.

விடியற் காலையில் கிழக்கு வெளுக்கும். கோழி கூவும். காகம் "கா! கா! கா!" என்று கத்தும். கீழ்வானம் சிவக்கும். பின்பு சூரியன் உதிக்கும். எல்லோரும் அப்பொழுது சுரு சுருப்புடன் வேலைக்குப் போவார்கள்.

வானத்தில் சூரியன் ஏற ஏற வெயில் அதிகமாக உறைக்கும். உச்சி வேளையில் சூரியன் தலைக்கு நேராகக் காண்பான். அப்பொழுது வெயில் கடுமையாக இருக்கும். பின்பு சூரியன் மேற்கே சாயச் சாய வெயில் தணியும்.

மாலை வேளையில் மஞ்சள் வெயில் காயும். அது உடம்புக்கு நல்லது. பறவைகள் கூட்டில் போய்ச் சேரும். எல்லோரும் தங்கள் வேலைகளைச் செய்துவிட்டு வீட்டுக்கு வருவார்கள். சூரியன் அஸ்தமிக்கும்.

67813 P31, J9

சூரியன் மறைந்ததும் எங்கும் இருட்டாய் இருக்கும். இரவில் வானத்தில் நக்ஷத்திரங்கள் "பளிச் பளிச்" என்று பிரகாசிக்கும். இரவில் யாவரும் அயர்ந்து தூங்குவார்கள். அப்பொழுது சத்தமில்லாமல் இருக்கும்.

சில நாள் இரவில் சந்திரன் வானத்தில் தோன்றுவான். சந்திர ஒளிக்கு நிலா என்று பெயர். அது வெயிலைப் போல் உஷ்ணமாக இராது; குளிர்ச்சியாக இருக்கும். நிலவைக் கண்டு உலகம் மகிழும்.

---

## 32. பாம்பாட்டி.

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்லபாம்பே!
பாதலத்தில் குடி புகும் பைகொள்பாம்பே!
பாடிப்பாடி நின்று விளை யாடுபாம்பே! (1)

வளைபுகும் போதேதலை நீட்டும் பாம்பே!
மண்டல மிட் டுடல்வளை வண்ணப் பாம்பே!
தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே!
தலை யெடுத்தே விளை யாடுபாம்பே! (2)



குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்!
கூறுந்திரு மாலினுக்குக் குடையுமானாய்!
கற்றைக்குழல் பார்வதிக்குக் கங்கணமானாய்!
கரவாமல் உளங்களித் தாடுபாம்பே! (3)

மண்டலத்தைத் தாங்குமிகு வல்லமை கொண்டாய்!
மாயனது படுக்கைக்கு வண்ணப் பாயானாய்!
கண்ட படை நடுங்கிட காட்சியும் பெற்றாய்!
கண்ணே செவியாகக்கொண்டாய் ஆடுபாம்பே! (4)

---

## 33. கஜேந்திரன்.

ஒரு காட்டில் யானை ஒன்று இருந்தது. அது யானைகளுக்கெல்லாம் அரசு; ஆதலால் அதற்குக் கஜேந்திரன் என்று பெயர்.



அது தினந்தோறும் மடுவில் இறங்கி நீரில் விளையாடும். பிறகு அது துதிக்கையால் ஆயிரம் தாமரை மலர்களைப் பறித்து, நாள் தவறாமல் கடவுளைப் பூஜிக்கும். இங்ஙனம் கஜேந்திரன் திருமாலைத் தொழுது வந்தது.

ஒரு நாள் கஜேந்திரன் வேறொரு காட்டில் தாமரை மலர் நிறைந்த ஒரு மடுவைக் கண்டது;

உடனே புஷ்பங்களைப் பறிக்க வெகு ஆவலுடன் அது அம்மடுவில் இறங்கிற்று. அப்போது அதில் இருந்த பெரிய முதலை ஒன்று அதன் காலைக் கௌவிக் கொண்டது. முதலையின் வாயினின்று தப்பித்துக் கொண்டு கரை ஏறக் கஜேந்திரன் முதலையைக் காலால் உதறி உதைத்தது; துதிக்கையால் ஓங்கி அறைந்தது; முதலையோ கஜேந்திரனை விடவில்லை. முதலைக்கு ஜலத்தில் பலம் அதிகம். "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது பழமொழி அல்லவா?

கஜேந்திரன் கடைசியில் திருமாலை நினைத்தது; ஏங்கி இளைத்துக் கண்ணீர் சொரிந்தது; துதிக்கையை உயரத் தூக்கி, "ஆதிமூலமே!" என்று கூவிக் கூவி அழைத்தது.

உடனே திருமால் வெகு வேகமாகக் கருடன் மீது அதன் எதிரில் தோன்றினார். அவர் தமது சக்கரத்தால் முதலையைத் துணித்து, யானையைக் காப்பாற்றினார்.

'தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்'.

'கடவுளைப் போற்றி வாழ்'.

---

# 34. எள்ளு



எள்ளு ஒரு செடியின் விதை. அது நவ தானியங்களில் ஒன்று. எள்ளு புன்செய் நிலங்களில் விளையும்.

கோடை மழை பெய்ததும் குடியானவர்கள் நிலத்தை உழுது எள்ளை விதைப்பார்கள். அது சீக்கிரத்தில் முளைத்து வளரும். நல்ல வெயி

லும், சொற்ப மழையும் அதற்கு வேண்டும். எள் பயிரிடுவது மிகவும் சுலபம். 'இளைத்தவன் எள்ளை விதை' என்பது பழமொழி.

விதைத்த மூன்றும் மாதம் செடியில் பூ எடுக்கும் ; பின்பு செடியில் காய் காய்க்கும். காய் முற்ற ஒரு மாதம் செல்லும். காய் முற்றினதும் குடியானவர்கள் செடியைப் பிடுங்கி எடுப்பார்கள்; அவைகளை ஓர் அடக்கமான இடத்தில் போட்டு மக்க வைப்பார்கள்; செடி மக்கிய பின்பு அதை வெயிலில் உலர்த்தினால் காய் உலர்ந்து வெடிக்கும். அப்போது காயிலிருந்து எள் உதிரும்.

எள்ளைச் செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பது வழக்கம். நாம் இதை நல்லெண்ணெய் என்கிறோம். தேங்காய், ஆமணக்கு, இலுப்பை, வேர்க்கடலை, இவைகளிலிருந்தும் எண்ணெய் எடுக்கலாம். பணியாரம் சுடவும், விளக்கு எரிக்கவும் சாதாரணமாய் எண்ணெய் உதவும்.

'சித்திரை எள்ளைச் சிதறி விதை'

'வையாசி எள்ளை வரப்பிலும் கோட்டு.'

---

# 35. வருஷங்கள்.

பகலும் இரவும் கொண்டது ஒரு நாள். முப்பது நாட்கள் சேர்ந்தது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் கூடினது ஒரு வருஷம். நாட்களுக்கும் மாதங்களுக்கும் பெயர் வழங்குவதுபோல் வருஷங்களுக்கும் பெயர் உண்டு.

| | | |
|---|---|---|
| பிரபவ | சர்வஜித்து | பிலவங்க |
| விபவ | சர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌம்மிய |
| பிரமோதூத | விக்கிருதி | சாதாரண |
| பிரஜோற்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரஸ | நந்தன | பரீதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துர்முகி | நள |
| ஈசுவர | ஏவிளம்பி | பிங்கள |
| வெகுதான்னிய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | சித்தார்த்தி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துர்மதி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருதிரோத்காரி |
| தாரண | குரோதி | ரக்தாக்ஷி |
| பார்த்திவ | விசுவாவசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

# 36. திதி.

சூரியனைப்போல் எப்பொழுதும் சந்திரன் முழு வட்டமாய்த் தோன்றுவதில்லை. மாதத்தில் ஒருநாள்தான் முழுச்சந்திரன் பிரகாசிக்கும், அந்தத் தினம் பௌர்ணிமை ஆகும். பௌர்ணிமைக்குப் பிறகு சந்திரன் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, பதினைந்தாம் நாளில் முற்றிலும் மறைந்துவிடும். இந்தத் தினத்தை அமாவாசை என்பார்கள்.

அமாவாசைக்கு அடுத்த நாள் முதல், சந்திரன் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து ஒளி வீசும்; அங்ஙனம் வளர்ந்து முழுவட்டம் ஆகப் பதினைந்து நாட்கள் செல்லும்.

வளரும் சந்திரனை வளர்பிறை என்றும், குறையும் சந்திரனைத் தேய்பிறை என்றும் கூறுவது வழக்கம். சந்திரன் வளரும் பதினைந்து நாள்களுக்கும் சுக்கில பக்ஷம் என்று பெயர்; தேயும் பதினைந்து நாட்களுக்கும் கிருஷ்ண பக்ஷம் என்று பெயர்.

இரண்டு பக்ஷத்திலும் உள்ள நாட்கள் திதிகள் என வழங்கும்.

| | |
|---|---|
| சுக்கிலபக்ஷம் | கிருஷ்ணபக்ஷம் |
| பிரதமை | பிரதமை |
| துவிதியை | துவிதியை |
| திருதியை | திருதியை |
| சதுர்த்தி | சதுர்த்தி |
| பஞ்சமி | பஞ்சமி |
| ஷஷ்டி | ஷஷ்டி |
| ஸப்தமி | ஸப்தமி |
| அஷ்டமி | அஷ்டமி |
| நவமி | நவமி |
| தசமி | தசமி |
| ஏகாதசி | ஏகாதசி |
| துவாதசி | துவாதசி |
| திரயோதசி | திரயோதசி |
| சதுர்த்தசி | சதுர்த்தசி |
| பௌர்ணிமை | அமாவாசை |

## 37. நக்ஷத்திரம்.

ஆகாயத்தில் பல்லாயிரம் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை இருபத்தேழு.

| | |
|---|---|
| அசுவினி | சித்திரை |
| பரணி | சுவாதி |
| கிருத்திகை | விசாகம் |
| ரோகிணி | அநுஷம் |
| மிருகசீரிடம் | கேட்டை |
| திருவாதிரை | மூலம் |
| புனர்பூசம் | பூராடம் |
| பூசம் | உத்திராடம் |
| ஆயிலியம் | திருவோணம் |
| மகம் | அவிட்டம் |
| பூரம் | சதயம் |
| உத்திரம் | பூரட்டாதி |
| ஹஸ்தம் | உத்திரட்டாதி |
| | ரேவதி. |

# 38. உலகநீதி

ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்
தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்
வாதாடி வழக்குரைத்துச் செல்லவேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்
செய்த நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்தவேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

67813
P31, J9
N25

# டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்

## பிரசுரங்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | அநுபவமுறை பாலபோத கணிதம் முதற் புத்தகம் (உபாத்தியாயர்களுக்கு) .... | 0 | 6 | 0 |
| 2. | ஷை இரண்டாம் புத்தகம் (பிள்ளைகளுக்கு) .... ... .... | 0 | 5 | 0 |
| 3. | ஷை மூன்றாம் புத்தகம் (ஷை) .... | 0 | 8 | 0 |
| 4. | சங்கவாசகம் முதற் புத்தகம் .... | 0 | 2 | 0 |
| 5. | ஷை இரண்டாம் புத்தகம்.... .... | 0 | 3 | 0 |
| 6. | சிறு பொறி பெருந்தீ .... .... | 0 | 6 | 0 |
| 7. | தசரத ராமன் .... .... .... | 0 | 4 | 0 |
| 8. | பால பாகவதம் .... .... .... | 0 | 5 | 0 |
| 9. | பால இராமாயணம் .... .... | 0 | 5 | 0 |
| 10. | பால பாரதம் .... .... ... | 0 | 8 | 0 |
| 11. | பரிணய பஞ்சகம் .... .... | 0 | 5 | 0 |
| 12. | புகழேந்திப்புலவர் .... .... .... | 0 | 10 | 0 |
| 13. | பொறாமைப் பேய் .... .... .... | 0 | 6 | 0 |
| 14. | உமாதேவி ஹைமவதி .... .... | 0 | 6 | 0 |
| 15. | நந்தன் .... .... .... .... | 0 | 5 | 0 |
| 16. | ராணா அமீர்சிங் ... .... .... | 0 | 3 | 0 |
| 17. | உத்தம ஆசிரியர் (உபாத்தியாயர்களுக்கு).... | 1 | 0 | 0 |

வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மதராஸ் ப்ரீமியர் கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

33, இராமசாமித் தெரு, சென்னை.